**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 275/2014**
**வழக்கு சாட்சி. அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | நதியா | **தாலுகா:** | அறந்தாங்கி |
| **தந்தை பெயர்:** | சின்னையா | **தொழில்:** | சார்பு ஆய்வாளர் |
| **கிராமம்:** | அறந்தாங்கி | **வயது:** | 37/2026 |

**Solemnly affirmed of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**A1 and A2 Died. A3 present. Petition filed and allowed. Counsel present.**

**As per Circular of the Hon'ble High Court of Madras in ROC.No.74663/2024/F1–Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**தேதி : 22.05.2026**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்போது அறந்தாங்கி காவல் நிலையத்தில் சார்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மற்றும் புலன் விசாரணை அதிகாரி திரு. கலியபெருமாள் உதவி ஆய்வாளர் அவர்கள் உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்ற அனுமதியுடன் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். கடந்த 13.09.2014 ஆம் தேதி திரு. கலியபெருமாள் உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்று தகவலின் அடிப்படையில் அங்கு சென்று பார்த்து அங்கு சிகிச்சையில் இருந்த ராமசாமி மகன் சிதம்பரம் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.460/2014, இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 379–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றேய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் காசிநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3** ஆகவும், **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் குமார், விஸ்வமூர்த்தி, சரவணன், பரமசிவம் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் அளித்த **விபத்துபதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு புலன்

விசாரணை அதிகாரி 2, 3 எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 1–ம் எதிரி மாண்பமை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. சம்பவ இடத்திற்கு சென்று உடைந்த கண்ணாடி பாட்டில் துண்டுகள் இரண்டினை கைப்பற்றி, இந்நீதிமன்றத்தில் ஆர்.பி 210/2014–ன் கீழ் சமர்ப்பித்துள்ளார். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.6** ஆகவும், படிவம் 91 **அ.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உடைந்த பாட்டில் துண்டுகள் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427, 379–ன் கீழ் பிரிவுகளின் கீழ் 10.10.2014 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல. பொய்யான புகாரின் பேரில் எதிரியின் பேரில் பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை, என்று சொன்னால் சரியல்ல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை, என்று சொன்னால் சரியல்ல. வேறு ஒரு வழக்கின் தடயப்பொருள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.05.22 03:39:52 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**